# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மனியில் 17.06.2011 அன்று ஆற்றிய
## ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் நமக்கு இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பினை வழங்கி அஹ்மதிகளாகிய நம் மீது மிகப்பெரும் கருணை காட்டியுள்ளான். ஓர் அஹ்மதி சிந்தித்துப் பார்த்தாரென்றால் இறைவனுடைய இந்த அருளுக்கு தனது வாழ்நாள் முழுவதும் நன்றி செலுத்தினாலும் அது ஈடாகாது. தற்போது உலகில் 200 கோடி முஸ்லிம்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு மற்றும் கட்டளை என்னவென்றால், பதினான்காம் நூற்றாண்டில் மஸீஹ், மஹ்தியுடைய தோற்றம் இருக்கும். ஒரு இருண்ட காலத்திற்குப் பிறகு மீண்டும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியின் காலம் வரும். எனவே அவர் தோன்றும் போது, அடையாளங்கள் முழுமை அடையும் போது அதில் குறிப்பாக ரமலான் மாதத்தில் சூரிய சந்திர கிரகணம் அதற்கான குறிப்பிட்ட காலத்தில் நடைபெறும். மேலும் இது எப்படிப்பட்ட அடையாளம் என்றால் வானங்கள், பூமி படைக்கப்பட்டதிலிருந்து வேறு எவருக்காகவும் இத்தகைய அடையாளம் வெளிப்பட்டதேயில்லை. அப்போது அந்த இறை அடியாரை – எனது உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்ள வேண்டுமென ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

மேலும் திருக்குர்ஆன், வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம் என்று கூறி இதன்பக்கம் அதிக கவனமூட்டியுள்ளது. இதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அரபிகள் அல்லாதவர்களிடம் அவரைத் தேட வேண்டும் என விளக்கம் அளித்துள்ளார்கள். மேலும், பனி மலைகளின் மீது முழங்கால்களில் தவழ்ந்து செல்ல நேரிட்டாலும் சரியே, அவரிடம் சென்று என்னுடைய ஸலாத்தை தெரிவிக்க வேண்டும் என்றும் அன்னார் கூறினார்கள்.

எனவே முஸ்லிம்கள் எப்பொழுதும் நேர்வழியில் இருப்பதற்கும், ஹிதாயத்தை ஏற்றுக் கொள்வதற்கும் இறைவன் துஆவையும் கற்றுத் தந்துள்ளான். இவ்வாறிருந்தும் கூட தற்போது வரை 5 அல்லது 6 சதவிகிதம் மக்கள் மட்டும் தான் காலத்தின் இமாமை கண்டறியக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். முஸ்லிம்கள் தமது தொழுகைகளில் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை பலமுறை ஓதியும் கூட நான் கூறியது போன்று திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகளும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளும், கூற்றுக்களும் இருந்தும் கூட முஸ்லிம்களில் பெரும்பாலோர் இந்தக் காலகட்டத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதில் மறுப்பு தெரிவிக்கின்றார்கள். மறுப்பது மட்டுமின்றி எதிர்ப்பதிலும் அதிகமாக ஈடுபடுகின்றனர். அல்லாஹ் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும், நாத்திகர்களுக்கும், மத மற்றவர்களுக்கும் ஹிதாயத் வழங்குகின்றான். நேர்வழிக்கான பாதையைக் காட்டுகின்றான். ஒவ்வொருவரிடமும் ஆயிரக்கணக்கில் இவர்களிலிருந்து ஜமாஅத்தில் இணைகின்றனர். ஆனால் துரதிருஷ்டவசமாக முஸ்லிம் என்று கூறக் கூடிய பெயர்தாங்கி முஸ்லிம்கள், ஆதாயம் தேடக்கூடிய உலமாக்களுக்குப் பின்னால் சென்று காலத்தின் இமாமை எதிர்ப்பதில் எல்லை மீறி விட்டார்கள். அல்லாஹ் தான் இவர்களுக்கு அறிவை வழங்க வேண்டும். பெயர்தாங்கி உலமாக்களின் நிலை எவ்வாறு உள்ளதென்றால் வெளிப்படையாக அவர்களின் சீர்திருத்தத்திற்கான வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டு விட்டன. ஆனால் அப்பாவிகளாக இருக்கக்கூடிய அல்லது தனது சிந்தனைக்கேற்ப ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ளும் நோக்கத்தோடு இந்த ஆலிம்கள் பின்னால் செல்லக் கூடியவர்களுக்கு அல்லாஹ் நேரான வழியைக் காட்டுவானாக! இதன் மூலம் காலத்தின் இமாமை அடையாளம் காணட்டுமாக!

காலத்தின் இமாமுடன் பகைமை கொள்ளக்கூடியவர்கள் சில இடங்களில் எல்லை மீறி விட்டனர். அவர்கள் அதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். தனது முடிவை நல்லதாக ஆக்குபவர்களாக அவர்கள் ஆக வேண்டும்.

இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ – அந்தோ! முஸ்லிம்களின் உள்ளத்தின் ஓசையாக இருக்க வேண்டும். முஸ்லிம் உம்மத் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக வேண்டும். உலகம் இவர்களை கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் பார்க்க வேண்டும்.

ஓரிடத்தில் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற வசனத்திற்கு விளக்கம் எழுதியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன், பௌதீக வாழ்வில் அரசனுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும் என எவ்வாறு வலியுறுத்துகிறதோ அதேபோன்று ஆன்மீக வாழ்விற்காகவும் வலியுறுத்துகிறது. இதன் பக்கம் தான் அல்லாஹ் கற்றுக் கொடுத்த துஆவான இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம் கவனமூட்டுகிறது.

எனவே சிந்திக்க வேண்டும். எந்த நம்பிக்கையாளரும் எந்த மனிதனும் எந்த விலங்கும் இறைவனுடைய அருளைப் பெறாமல் இல்லை. மேலும் இறைவன், அவர்கள் பின்பற்றுவதற்கு இந்தக் கட்டளையிட்டுள்ளான் எனக் கூற முடியாது.

எனவே இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், எவர்கள் மீது முழுமையான முறையில் ஆன்மீக மழை பொழிந்திருக்கின்றதோ, அவர்களது வழியினைப் பின்பற்ற வாய்ப்பளிப்பாயாக! இதன் மூலம் நாங்கள் அவர்களைப் பின்பற்றுவோம் என்பதாகும். எனவே இந்த வசனத்தில் காலத்தின் இமாமுடன் இணைந்திருக்க வேண்டும் என கவனமூட்டப்பட்டுள்ளது.

காலத்தின் இமாமைப் பற்றி கூறும் போது, அவர்கள் நபியாகவும் இருப்பார்கள். உலகின் ஹிதாயத்திற்காக அனுப்பப்பட்டவர்களாகவும் இருப்பார்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எனவே நான் கூறியது போன்று இக்காலகட்டத்தில் திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப இக்காலத்தின் இமாம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி மஃஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களே ஆவார்கள். இவர்கள்தான் அல்லாஹ்விடமிருந்து அருள்களைப் பெற்று வந்துள்ளார்கள். எனவே இந்த அருள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலம் மறுமை வரைக்கும் நீடித்திருக்கும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக கிடைத்துக் கொண்டிருக்கும் என்று கூறியது போன்று இந்த அருள் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைந்திருப்பதன் மூலமாகவே கிடைக்கப்பெறும்.

இன்றிலிருந்து 1400 வருடங்களுக்கு முன்பு இறங்க ஆரம்பித்த இந்த அருளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் அதிக அளவு பயன் பெற்றார்கள். மேலும் தனது ஈமானில் புத்துணர்வை எவ்வாறெல்லாம் ஏற்படுத்த முடியும் என ஒவ்வொரு நொடிப்பொழுதும் சிந்தனை செய்து கொண்டிருந்தார்கள்.

இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ எப்பொழுதும் செய்து கொண்டிருந்தனர். தொழுவார்கள்; அந்த தொழுகையின் ஒவ்வொரு வார்த்தையும் அவர்களின் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டது. மேலும் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் உதாரணம் கூற முடியாத அளவு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தியிருந்தார்கள். எனவே அல்லாஹ் அவர்களுக்கு ரலியல்லாஹு அன்ஹு என்ற அந்தஸ்தை வழங்கினான்.

எனவே இந்த அருளைப் பெறுவதற்கு ஹிதாயத்தில் நிலைநிற்பதற்கு ஸிராத்தே முஸ்தகீமில் எப்பொழுதும் சென்று கொண்டிருக்க, நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளையை ஏற்றவாறு இக்காலத்தின் மஸீஹ், மஹ்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் அவர்களுடன் எப்பொழுதும் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகக்கூடிய ஒரு தொடர்பை ஏற்படுத்த வேண்டும்.

நாம் பைஅத் செய்யும் போது இந்த தொடர்புக்கு எப்பொழுதும் முக்கியத்துவம் வழங்குவோம் என்று வாக்குறுதி அளித்துள்ளோம். பைஅத்தின் பத்தாவது நிபந்தனையில், இவ்வாறு வருகின்றது. அல்லாஹ்வுக்காக, நல்ல வி-யங்களில் நான் கட்டுப்படுவேன் என இந்த எளியவனிடம் (இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம்) நான் செய்து கொள்ளும் இந்த சகோதர உடன்படிக்கையில் மரணமடையும் வரை நிலைத்திருப்பேன் என்றும் மற்றெல்லா உலகத் தொடர்புகளை விடவும் இந்த சகோதர உடன்படிக்கை மிகவும் உயர்ந்தாக இருக்கும் என்றும் நான் உறுதி கூறுகின்றேன்.

எனவே நாம் பைஅத் செய்து விட்டோம். நமது இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது என நினைக்கக் கூடாது. அல்லது அல்லாஹ் நமது முன்னோர்களுடைய இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை ஏற்றுக் கொண்டான். அதன் மூலமாக தனது அருளினால் நம்மை அஹ்மதி வீட்டில் பிறக்க வைத்துள்ளான் என நினைக்கக் கூடாது.

அல்லாஹ் நமக்கு இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியிருக்கின்றான். இது போதுமானது ஆகாது. நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப இந்த இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால் நமது பாதங்களை முன்னேற்றப் பாதையில் எடுத்து வைக்க வேண்டும். முன்பை விட அதிகமாக இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இறுதி நாள் வரை நாம் செய்த இந்த வாக்குறுதியில் அல்லாஹ் நம்மை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்வானாக! நாம் ஸிராத்தே முஸ்தகீம் -ல் எப்பொழுதும் சென்று கொண்டிருக்கக் கூடியவர்களாக இருப்போமாக! மேலும் நாம், *ஃபலா தமூத்துன்ன இல்லா வ அன்த்தும் முஸ்லிமூன்* - நீங்கள் கட்டுப்படக்கூடியவர்களாக இருக்கின்ற நிலையிலே அன்றி மரணிக்க வேண்டாம் என்ற திருக்குர்ஆனின் கட்டளைக்கேற்ப செயல்படக் கூடியவர்களாக வேண்டும். மேலும் எப்பொழுதும் கவனம் செலுத்துவதற்காக அல்லாஹ் இந்த வசனங்களைக் கற்றுத் தந்துள்ளான். ஒவ்வொரு தொழுகையிலும் ஒவ்வொரு தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை முன் நிறுத்த வேண்டும் என கட்டளையிட்டுள்ளான்.

ஏனென்றால் அல்லாஹ் மட்டும் தான் ஹிதாயத்தை வழங்கக் கூடியவன். தன்னுடைய ஆன்மாவை ஆராய்ந்தவாறு இறையச்சத்தை மனதில் கொண்டவாறு அவனிடம் நேர்வழியில் நிலைநிற்பதற்கு துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும். அவனை தவிரத்து நேர்வழி கிடைப்பது கடினமாகும்.

மனிதன் வேறெவரிடமும் ஏற்படுத்தாத தொடர்பை அவனிடம் ஏற்படுத்த வேண்டும். அதுபோன்ற தொடர்பு வேறெவரிடமும் தென்படக் கூடாது. அதுவும் முழுமையான கட்டுப்படுதலுடன் கூடிய தொடர்பாக இருக்க வேண்டும். எனவே அல்லாஹ்விடமே ஹிதாயத்தை கேட்க வேண்டும். அவனிடமே உதவியையும் கேட்க வேண்டும்.

எனவே நாம் இக்காலத்தின் இமாமுடன் செய்த பைஅத் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்றால், ஸிராத்தே முஸ்தகீம் உடைய உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்வது அவசியமாகும். அதில் சிந்தனை செய்வது அவசியமாகும். உருக்கத்துடன் இந்த துஆவைச் செய்வதும் அவசியமாகும்.

ஏனென்றால் காலத்தின் இமாமுடன் இணைந்த பிறகு நாம் காலத்தின் இமாமின் கையில் பைஅத் செய்து விட்டோம்; இது போதுமானது என்று நினைப்பது போதுமானதல்ல. மாறாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது

(அலை) அவர்கள் ஏற்படுத்திய அமைப்புடனும் இணைந்திருப்பது அவசியமாகும். இதனைப் பற்றி அல் வஸிய்யத் என்ற நூலில் மிக விளக்கமாகக் கூறியுள்ளார்கள். அது கிலாஃபத் அமைப்பு ஆகும்.

ஒரு மனிதர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மட்டும் ஏற்றுக் கொண்டு அதற்குப் பிறகு வரக்கூடிய வல்லமையை மறுக்கிறார் என்றால் அல்லது மரணம் வரைக்கும் கட்டுப்படுவேன் என்று செய்துள்ள வாக்குறுதியில் கவனமற்றவராக இருக்கிறார் என்றால், அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சேவகனாக இருக்கக்கூடிய தொடர்பை முறித்துக் கொள்ளக் கூடியவராகிறார். மேலும் அன்னாருடன் இணைந்திருப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய பரக்கத்துகளிலிருந்தும் அவர் தடுக்கப்படுகிறார். பைஅத் செய்யாதவர்களின் உதாரணம் நம் கண் முன் இருக்கிறது. இது மிகப்பெரிய உதாரணமாகும். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். மேலும் பைஅத் செய்ததற்கான வாதமும் செய்தார்கள். ஆனால் அன்னாருடைய தூதுச் செய்தியினை அவர்கள் புரியவில்லை. அல்லது தனது சுயநலத்தினால் அந்த தூதுச் செய்தியினைப் புரிந்து கொள்ள முயற்சியும் செய்யவில்லை. அதாவது இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக ஏற்படுத்திய கிலாஃபத்தை அவனது இரண்டாவது வல்லமையாக இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வதிலிருந்து தவிர்ந்து கொண்டார்கள்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு அவர்களுக்கு பின்பு வந்த இரண்டாவது வல்லமையாகிய கிலாஃபத்துடன் முழுமையான முறையில் தனது ஆற்றல்களுடன் விசுவாசம் காட்டியவாறு தொடர்பை ஏற்படுத்திய நம்மில் ஒவ்வொருவரும் அதிர்ஷ்சாலியாவோம். ஆனால் ஓர் அஹ்மதிக்கு இது ஸிராத்தே முஸ்தகீம் உடைய எல்லை கிடையாது. நான் கூறியது போன்று ஒவ்வொரு நேரமும் நஃப்ஸை ஆராய்ந்து கொண்டே இருக்க வேண்டும். இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் எனற துஆ முன்னேறிக் கொண்டே செல்வதற்கான தொடர்ச்சியாகும். ஒவ்வொரு நேரமும் ஹிதாயத்திற்கான வழியினைத் தேடியவாறு நிலைத்து நிற்பது தான் நம்பிக்கையாளருடைய அடையாளமாகும். ஆன்மீகத்தில் உயர்தரத்தில் இல்லாத சாதாரண மனிதன் ஒவ்வொரு நேரமும் ஷய்த்தானுடன் சண்டையிடுகின்றான். அல்லது நன்மைகள் செய்த பிறகும் கூட ஷய்த்தான் அவனை வழிகெடுக்க முயற்சி செய்கிறான் என்றும் கூறலாம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக்கொண்ட பிறகும், கிலாஃபத்துடன் விசுவாசமான தொடர்பை ஏற்படுத்திய பிறகும், பொருள் தியாகத்தில் பங்கு பெற்ற பிறகும், ஜமாஅத்திற்கு சேவைகள், வகாரே அமல் செய்த பிறகும் கூட பலர் தொழுகையில் சோம்பேறிகளாக இருக்கிறார்கள். தொழுகை மனிதனுடைய படைப்பின் அடிப்படை நோக்கமாகும். அதில் சோம்பேறித்தனம் இருந்தால் பிறகு அது கொஞ்சம் கொஞ்சமாக மற்ற நன்மைகளிலிருந்து விலக்கி விடும். மேலும் பல நன்மைகள் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள். தொழுகையையும் நிலைநாட்டுகிறார்கள். ஆனால் தனது வீட்டில் தனது குடும்பத்துடன் நல்ல முறையில் நடந்து கொள்வதில்லை. இவர்கள் நேர்வழியிலிருந்து விலகிச் செல்லக்கூடியவர்கள் ஆவார்கள். இவர்கள் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால் இறைவனின் மற்ற அனைத்து கட்டளையின்படியும் அமல் செய்யாதவர்களாக இருக்கின்றார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

உங்களில் எவர் தனது குடும்பத்துடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறாரோ அவரே உங்களில் சிறந்தவராவார்.

எனவே ஹிதாயத்தின் வழியினை தேடக் கூடியவர்கள், ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயங்களைக் கண் முன் நிறுத்தி செயல்பட வேண்டும். நம்பிக்கையாளருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருக்க

வேண்டிய அன்பை முன் நிறுத்தி செயல்பட வேண்டும். மேலும் அல்லாஹ்வும் ரஸூலும் எந்த வழியில் நம்மை நடத்த விரும்புகின்றார்களோ அதில் நடக்க முயற்சி செய்ய வேண்டும்.

நாம் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்று துஆ செய்யும் போது நமது நோக்கம், நமது எண்ணம் அனைத்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நம் முன் வைத்துள்ள நோக்கங்களாகவும் எண்ணங்களாகவும் இருக்க வேண்டும். இதிலிருந்து பலன் பெற்றவாறு அன்னாருடைய அருள் பெற்ற சஹாபாக்கள் நமக்கு உதாரணத்தைக் காட்டித் தந்துள்ளார்கள். இதனை இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது சொல், செயல் மூலமாக நமக்கு காட்டியவாறு இருளிலிருந்து ஒளியின் பக்கம் செல்வதற்கான வழியினைக் காட்டித் தந்துள்ளான். அன்னார் மூலம் அவர்களது சஹாபாக்களும் பயன்பெற்று தன்னுடைய வாழ்வில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி ஆன்மீகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது குடும்பத்துடன், தனது மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதற்குக் கட்டளையிட்டுள்ளார்கள்.

ஒருமுறை ஒரு சஹாபி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்து இவ்வாறு கூறினார். எனது மனைவி இவ்வளவு காலம் வரை அவளது தாயார் வீட்டில் இருந்து வந்திருக்கிறாள். ஆனால் அவளை இனிமேல் அவளது தாயார் வீட்டிற்குப் போக விடக்கூடாது என நான் எண்ணியுள்ளேன் என்றார்.

இந்த விஷயத்தைக் கேட்டதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் கோபமடைந்தார்கள். அன்னாருடைய முகம் சிவந்து விட்டது. அன்னார் கூறினார்கள்: எங்களுடைய இந்த மஜ்லிஸிலிருந்து சென்று விடுங்கள் என்றார்கள். இப்படிப்பட்ட விஷயங்கள் நமது சபையை அசிங்கப்படுத்துகின்றன. மேலும் கண்டிப்பான வார்த்தைகளையும் அன்னார் கூறினார்கள். பிறகு அந்த நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் மன்னிப்புக் கேட்டார். தனது மனைவியிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளாத மற்றொரு சஹாபி அந்த சபையில் இருந்தார். அவர் அங்கிருந்து எழுந்து பஜாருக்குச் சென்று சில பொருட்களை மனைவிக்காக வாங்கினார். பிறகு வீட்டிற்குச் சென்று தனது மனைவி முன் வைத்து இது உனக்காக நான் வாங்கிய அன்பளிப்பாகும் என்றார். மேலும் தனது மனைவியிடம் மிகவும் பரிவுடன் பேசினார். அவருடைய மனைவி எனது கணவருக்கு என்ன நிகழ்ந்தது? என்று அவரிடம் ஆச்சரியப்பட்டாள். இந்த மாற்றம் எவ்வாறு நடைபெற்றது? எங்களுக்கு என்னவாயிற்று? என்று அவரிடம் கேட்டார். அதற்கு அவர், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சபையில் தனது மனைவியிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளாத விஷயத்தில் அவர்கள் அதிகமான கோபத்தை வெளிப்படுத்தியதை நான் கண்டேன். நீயும் என்னை மன்னிப்பாயாக. மேலும் நான் இனிமேல் நல்ல முறையில் நடந்து கொள்வேன் என்று கூறினார்.

எனவே இந்த ஒரு மாற்றம் தான் நேர்வழியின் பக்கம் கொண்டு செல்கிறது. வீட்டிலிருந்து ஆரம்பித்து பிறகு சமூகத்தில் பரவும். பிறகு உலகில் பரவும். இதனைக் கொண்டு தான் ஓர் அஹ்மதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் பைஅத் செய்துள்ளார். இதன் காரணமாகத்தான் இறை நெருக்கத்தைப் பெற முடியும்.

ஹிதாயத் என்பது அல்லாஹ்வின் புறமிருந்து வரக்கூடியவரை ஏற்றுக் கொள்வது மட்டும் கிடையாது. அல்லது ஜமாஅத் அமைப்புடன் ஒன்றியிருத்தல் மட்டும் கிடையாது. மாறாக திருக்குர்ஆனின் போதனைகளின்படி தமது வாழ்வைக் கழிப்பதும் அதில் நிலைத்து நிற்பதும் ஹிதாயத்தின் அடிப்படையாகும்.

இஹ்தினஸ் ஸிராத்தல் முஹ்தகீம் என்ற துஆ இறைவனது உரிமைகளை நிறைவேற்றுவது மட்டும் கிடையாது. தனது ஈமானின் உறுதிப்பாட்டிற்காக மட்டும் கிடையாது. மாறாக படைப்பினங்களின் உரிமையை நிறைவேற்றுவதற்காகவும் இந்த துஆ இருக்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது வாழ்வின் ஒவ்வொரு பிரிவுக்கும் இந்த துஆ இருக்கிறது. இங்கு பலர் இருக்கிறார்கள். ஒரு சிலர் தனது மனைவியிடம் அநீதியிழைக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஒரு சிலரைப் பற்றி எனக்கு தெரியாது. வெளிப்படையில் மிகவும் நல்லவர்களாக இருக்கிறார்கள். மக்கள் மத்தியில் உயர்ந்தவராகவும் மேன்மையானவராகவும் நேர்வழியில் நிலைநிற்பவராகவும் இருக்கிறார்கள். ஆனால் தனது வீட்டு விஷயத்தில் ஸிராத்தே முஸ்தகீமிலிருந்து விலகி இருக்கிறார்கள். தனது மனைவியிடம் நல்ல முறையில் நடந்து கொள்வது, தனது குடும்பத்தாருடன் நல்ல முறையில் நடந்து கொள்வது சாதாரண விஷயம் கிடையாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உங்களில் மிகச் சிறந்தவர் தனது குடும்பத்தினருடன் நல்ல முறையில் நடப்பவரே என்று குறிப்பாக கூறியுள்ளார்கள். மேலும் கடைசியில் இதற்கான முன்மாதிரியாக நான் அதிகமாக எனது குடும்பத்துடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறேன் என்று கூறினார்கள். இது சாதாரண செயல் கிடையாது. இந்த செயலுக்கான முக்கியத்துவத்தை உணர்வதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தன்னை உதாரணமாக கூறியுள்ளார்கள்.

எனவே இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை நம்பிக்கையாளர் ஒவ்வொரு செயலிலும் கண் முன் நிறுத்தி செயல்பட வேண்டும். இதன் மூலம் நன்மையில் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். மரணம் வந்தால் கட்டுப்படுதல் என்ற நிலையில் தான் மரணம் வர வேண்டும்.

எனவே காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு பிறகு தனது நன்மையை மேம்படுத்த முயற்சியில் ஈடுபடுபவரும், தனது ஈமானில் முன்னேற்றத்தில் எப்போதும் விழிப்புடன் இருக்கக்கூடியவரும், அல்லாஹ்விடம் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீமில் தன்னை நிலைநிறுத்தி விட்டால் அதில் தனது பாதங்களை முன்னேறச் செய்ய வேண்டுபவரும், ஒவ்வொரு நேரமும் இறையச்சத்தில் முன்னேற முயற்சி செய்பவரும் தான் உண்மையான நம்பிக்கையாளர் ஆவார். ஏனென்றால் இறையச்சத்தில் முன்னேறுபவர் எப்போதும் இறையச்சத்தினால் அஞ்சிக் கொண்டிருப்பார். எவருடைய உள்ளத்தில் இறையச்சம் ஏற்பட்டு விடுமோ அவர் இறைவனுக்கு செய்ய வேண்டிய உரிமைகளை நிறைவேற்றுவதற்கும் முயற்சியும் துஆவும் செய்வார். மேலும் படைப்பினங்களுக்குச் செய்ய வேண்டிய உரிமைகளைச் செய்வதற்கும் முயற்சி மற்றும் துஆ செய்வார். இறைவனிடம் ஸிராத்தே முஸ்தகீம்-ல் நிலைத்து நிற்க துஆ செய்யக்கூடிய ஒவ்வொருவரும், மார்க்கத்திற்கு சேவை செய்வதற்கு விரும்புபவராக இருப்பார். மேலும் உண்மையான முறையில் மார்க்கத்திற்குச் சேவை செய்வார். அவர் தனது சுயவிருப்பத்தில் மட்டும் முன்னேற மாட்டார். மாறாக, அவர் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கேற்ப அவர் எடுத்து வைக்கக் கூடிய ஒவ்வொரு அடியும் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் நேசத்தைப் பெறுவதற்காகவே இருக்கும்.

எனவே ஓர் உண்மையான நம்பிக்கையாளர் தன்னுடைய வட்டத்தில் தம்மை நல்லவர்கள் என்று எண்ணக்கூடியவர்களைப் போன்றோ அல்லது தனது வட்டத்தில் உயர்ந்த அந்தஸ்த்தை பெற்று விட்டதாக கருதக்கூடியவர்களைப் போன்றோ ஆகக்கூடாது. தமக்கு உறுதியான ஒரு பாதுகாப்பான இடம் கிடைத்து விட்டது என இவர்கள் நம்புகிறார்கள். எப்போது இதுபோன்ற எண்ணம் ஒருவருக்கு வருமோ அவர் எவ்வளவு தூய்மையான நபராக இருந்தாலும் சரி, அவர் ஆன்மீக ரீதியில் மரணித்தவர்கள் ஆவார். அவர் ஷய்த்தானுடைய பிடியில் வந்தவராவார்.

எப்போதும் தன்னுடைய நஃப்ஸை ஆராய்வதும் பிறகு முன்னேற்றப் பாதையின் பக்கம் தொடர்ந்து அடி எடுத்து வைப்பதும் தான் நம்பிக்கையாளருடைய அழகாகும்.

தனது வட்டத்தில் ஏதாவது அந்தஸ்தைப் பெற்று சிறிதளவு ஜமாஅத்திற்குச் சேவை செய்தது குறித்து பெருமை கொண்டு ஜமாஅத்தின் சேவைகளையும் தனது இபாதத்துகளையும் போதும் என்று எண்ணியவாறு

படைப்பினங்களுக்குச் செய்ய வேண்டிய உரிமைகளிலிருந்து கவனமற்றவராய் இருந்தால், அப்படிப்பட்டவர் ஏதாவது அந்தஸ்தை பெற்றிருந்தால் கூட அவர் தனது அமல்கள் மூலம் அதனை இழந்து விடுவார்.

இதனால் உண்மையான நம்பிக்கையாளர் இன்றைக்குரிய நன்மையை மட்டும் பார்க்கமாட்டார். மாறாக தனது முடிவைத்தான் பார்ப்பார். தனது முடிவு நல்லதாக இருக்க துஆ செய்வார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைத் தவிர தூய்மைப்படுத்தும் ஆற்றல் எந்த மனிதருக்கும் கிடைக்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வந்த வஹியை எழுதக்கூடிய பொறுப்பாளர், இன்றைய காலத்தின்படி கூறவேண்டுமென்றால் செகரட்டரி, குறிப்பு எடுக்கக்கூடியவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வஹி எழுதும் சமயங்களிலெல்லாம் நினைவு கூறக்கூடிய அளவுக்கு நெருக்கத்தைப் பெற்றிருந்தார். இந்த மேன்மை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. மற்ற முஸ்லிம்களின் மத்தியிலும் அப்துல்லாஹ் பின் உபைதிற்கு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் வஹியை எழுதக்கூடியவர் என்ற பெருமை இருந்தது. ஆனால் முடிவு என்னவாயிற்று? அவருக்கு தடுமாற்றம் ஏற்பட்டது. அவருடைய அந்தஸ்திலிருந்து கீழே விழுந்து விட்டார்.

இதைப்போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலும் சிலர் இருந்தனர். அவர்கள் அன்னாரின் மீது அன்பும், பாசமும் கொண்டிருந்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக அவர்களுக்கு தடுமாற்றம் ஏற்பட்டது. பிறகு அன்னாரின் மிகக் கடுமையான எதிரியாக மாறிவிட்டார்கள். மிகவும் மோசமான, இழிவான ஆட்சேபனைகளை அன்னார் மீது சுமத்த ஆரம்பித்தனர். ஒவ்வொரு நாளும் புதுப்புது குற்றச்சாட்டுகளை வைக்க ஆரம்பித்தனர். ஆகையால் முடிவு நல்லதாக இருக்க இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ அவசியமாகும். இதில் கவனம் செலுத்துங்கள். அதிகமாக ஓதுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

மனித வாழ்வின் நோக்கம், ஸிராத்தே முஸ்தகீம் –ல் செல்வதும் அதற்கான தேடுதலும் ஆகும். இவற்றை இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் என்ற வார்த்தையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அல்லாஹ்வே! எங்களுக்கு நேரான வழியினைக் காட்டுவாயாக. நீ அருள் புரிந்தவர்களின் வழியினை எங்களுக்கு காட்டுவாயாக. இந்த துஆ ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு தொழுகையிலும் ஒவ்வொரு ரக்அத்திலும் கேட்கப்படுகின்றது.

இந்த அளவுக்கு இதனைத் திரும்பத் திரும்ப கூறுவது இதனுடைய முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத் நினைவில் கொள்ளட்டும். இது சாதாரண விஷயம் கிடையாது. கிளியைப் போன்று வெறும் வாயினால் திரும்பத் திரும்ப கூறுவது உண்மையான நோக்கம் கிடையாது. மாறாக இது மனிதனை முழுமையான மனிதனாக மாற்றுவதற்கான மிகச்சிறந்த வழிமுறையாகும். இதனை எப்போதும் கண் முன் நிறுத்தி செயல்படக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதன் மூலம் மனிதனுக்குரிய உரிமைகளும், படைப்பினங்களுக்குரிய உரிமைகளும் நிறைவேற்றப்பட்டு விடும். மேலும் இந்த துஆ மூலம் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட மனித ஆற்றலும் பயன்படுத்தப்பட்டு விடும்.

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:**

எனவே அருள் செய்யப்பட்ட மக்களிடமுள்ள சிறப்பு அம்சங்கள் மற்றும் ஸிராத்தே முஸ்தகீமின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. இதனைப் பெறுவது ஒவ்வொரு மனிதனுடைய நோக்கமாகும்.

நமது ஜமாஅத்திற்கு குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் இந்த ஜமாஅத்தை நிலைநாட்டி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய ஜமாஅத்தைப் போன்று ஆக்க வேண்டும் என விரும்பினான்.

ஏனென்றால் இந்த இறுதிக் காலத்தில் திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைத்துவம் மற்றும் மேன்மைக்கு இது சான்றாக இருக்க வேண்டும். இது மிகப்பெரிய பணியாகும். இது ஜமாஅத்தின் மிகப்பெரிய பொறுப்பாகும். திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் மேன்மையில் ஒவ்வொரு அஹ்மதியும் சாட்சியாளராக இருக்க வேண்டும்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியும் திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைத்துவம், மேன்மைக்கு சாட்சியாளராக இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ செய்தவாறு முன்னேற்றத்தின் பாதைகளை கடக்கும் போதுதான், அருள்களைப் பெற்றவர்களின் தரத்தைப் பெறும் போதுதான் உண்மையான நல்லடியார்களாகவும் அதற்குரிய சாட்சியாளராகவும் ஆக முடியும்.

திருக்குர்ஆனின் போதனைகளின் ஒவ்வொரு பகுதியையும் தனது வாழ்வின் அங்கமாக ஆக்க வேண்டும். இந்த தரத்தை அடைவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் முயற்சி செய்யும் போதுதான் நாம் உண்மையில் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்பதைப் பற்றி முழுமையாக அறிபவர்களாவோம். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடியவர்கள் ஆவோம். இல்லையென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று இந்த துஆ கிளியைப் போன்று வெறும் வாயினால் திரும்பத் திரும்ப கூறுவதாகி விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் அறிவுரை கூறியவாறு எழுதுகின்றார்கள்:**

இறைவனுடைய விஷயத்தில் அடியானின் ஏதாவது ஒரு பகுதி குறைபாடு, ஏமாற்றுதலாக, குறைபாடு உள்ளதாக இருந்தால் அதே அளவு இறைவன் புறமிருந்தும் வெளிப்படும். அதாவது இறைவனின் விஷயத்தில் ஏதாவது குறை இருந்ததென்றால் அல்லாஹ் அதற்குப் பதிலாக குறைவை ஏற்படுத்தமாட்டான். மாறாக இறைவன் அந்தக் குறையை அதாவது ஏமாற்றுதலைப் புரிந்து கொள்வான். அந்த ஏமாற்றுதலினால் கூலி கிடைக்காது. அல்லாஹ் அனைத்தையும் அறியக் கூடியவனாவான்.

**மேலும் கூறுகின்றார்கள்:** இறைவனுடைய விஷயத்தில் தன்னுடைய உள்ளத்தை தூய்மையாக வைத்து, எந்தவித குறையும் இல்லாமல் இருந்தால் அல்லாஹ்வும் குறை வைக்கமாட்டான்.

மனிதனுடைய உள்ளம் அவனுக்கு கண்ணாடி ஆகும். அதில் அவன் அனைத்தையும் பார்க்க முடியும். தன்னுடைய கவலையை நீக்க உண்மையான வழி தனது பாவங்களுக்காக உண்மையான உள்ளத்துடன் பாவமன்னிப்பு கேட்க வேண்டும். மேலும் விசுவாசம், நன்னடத்தையை வெளிப்படுத்த வேண்டும். நீங்கள் செய்த பைஅத் உடன்படிக்கைக்கு அனைத்தையும் விட முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இதைப் பற்றி உங்களிடம் கேட்கப்படும். எனவே தமது ஆன்மாவினை ஆராய்வது அவசியமாகும். உலகில் கோடிக்கணக்கான மக்கள் உள்ளனர். அவர்கள் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை ஓதுகிறார்கள். இவர்களின் நிலை கிளியைப் போன்று திரும்பத் திரும்ப கூறுவதாகும். ஆனால் தொழுகைக்குப் பிறகு கூச்சல், குழப்பத்தில் ஈடுபடுவது தான் இவர்களது நோக்கமாக இருக்கிறது. சிலருடைய வாயிலிருந்து ஜமாஅத்திற்கு எதிராக தீய வார்த்தைகள் தான் வெளியாகிறது. பள்ளிவாசலில் நின்று கொண்டு தீய வார்த்தைகளைத்தான் கூறுகிறார்கள்.

இதுதான் ஸிராத்தே முஸ்தகீம். இதற்காகத்தான் இந்த துஆ கற்றுக் கொடுக்கப்பட்டதா? நிச்சயமாக கிடையாது. மாறாக நம் முன் விலங்குகளின் செயல்பாட்டினை விட்டு விட்டு, மனிதனாக ஆகக்கூடிய ஸிராத்தே முஸ்தகீம் தான் இருக்கிறது. மேலும் மனிதனை ஞானம் பெற்ற மனிதனாக்கக் கூடியதும் பிறகு இறை தொடர்புடைய மனிதனாக்கக்கூடியதும் தான் இருக்கிறது. எனவே நம்முன் இந்த முன்மாதிரி கட்டுக்கதையைப் போன்று கிடையாது. வந்தோம்; கதையைக் கேட்போம்; சென்று விட்டோம் என்பது கிடையாது. மாறாக இவை அனைத்தும் நாம் அமல் செய்வதற்கும், அமல் செய்வதன் பக்கம் கவனமூட்டுவதற்காகவும்தான் ஆகும்.

இக்காலத்தில் இந்த விஷயத்தின் அடிப்படையில் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பைஅத் வாங்கியுள்ளார்கள். இந்த உணர்வை உள்ளடக்கியவாறு திருக்குர்ஆனின் போதனைகளின்படி அமல் செய்வதன் மூலம் தான் நாம் பைஅத் உடன்படிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியும். இல்லையென்றால் கோடிக்கணக்கான முறை இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்று நாம் கூறினாலும் அது இறைவன் மத்தியில் ஒன்றுமேயில்லை. மாறாக இந்த முயற்சி உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழக்கூடிய இந்த வார்த்தை, அல்லாஹ்விடம் நேர்வழியில் நடப்பதற்கு மற்றும் அதில் நிலைத்து நிற்பதற்கு உதவி கோருவது போன்றவை இறை நெருக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமையும். இல்லையென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று கேட்கப்படுவீர்கள். உங்களது வாதம் ஒன்றாகவும், உங்களுடைய செயல் ஒன்றாகவும் இருக்கிறது என உங்களிடம் கேள்வி கேட்கப்படும். எனவே ஒவ்வொரு துஆவுடனும் முயற்சி, நல்லெண்ணம் இருப்பது நிபந்தனை ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் கூறுகிறான்: *வல்லதீன ஜாஹது ஃபீனா லநஹ்தியன்னஹும் சுபுலனா* – நமது பாதையில் முயற்சி செய்பவர்களுக்கு நாம் நேர்வழியினைக் காட்டுவோம்.

**அன்னார் கூறுகின்றார்கள்**: இது வாக்குறுதியாகும். மேற்குறிப்பிட்ட இடத்தில் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்பது துஆ ஆகும்.

எனவே மனிதன் இதனை கண் முன் வைத்தவாறு தொழுகையில் தொடர்ந்து துஆ செய்ய வேண்டும். மேலும் முன்னேற்றம் அடைந்தவர்களைப் போல் ஆக வேண்டும் என ஆசைப்பட வேண்டும். இவ்வுலகத்திலிருந்து குருடனாகவும் பார்வையற்றவனாகவும் எழுப்பப்படக் கூடாது என்ற நிலைமை வரக்கூடாது. ஒரு வகையில் அல்லாஹ் நமக்கு பார்வையை வழங்கியிருக்கிறான். அல்லாஹ், ரஸூல் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியினைப் புரிந்தவாறு நாம் காலத்தின் இமாமுடன் ஒன்றிவிட்டோம். நான் கூறியது போன்று முன்னேற்றத்தின் பாதை திறந்தே கிடக்கிறது. ஆன்மீக படித்தரங்களை ஒவ்வொன்றாக கடந்து கொண்டே சென்று விடலாம். முன்னேற்றத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஜமாஅத்தில் இணைந்து தனக்குள் ஒரு மாறுதலை ஏற்படுத்த வேண்டும்; அது வெளிப்பட வேண்டும். எந்தக் கட்டளையையும் சாதாரணமாகக் கருதக் கூடாது. மாறாக ஒவ்வொரு கட்டளையையும் கண்ணியத்துடன் பார்க்க வேண்டும். எனவே, திருக்குர்ஆனின் ஆயிரக்கணக்கான போதனைகளைப் புரிவதற்கும் அதன்படி செயல்படுவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இந்த முயற்சி, இந்த ஆராய்தல் மனிதன் தனக்காகத்தான் செய்கின்றான். இதுதான் மிகச் சிறந்த வழியாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியது போன்று மனிதனின் உள்ளம் கண்ணாடியாகும். தன்னுடைய உள்ளத்தின் கண்ணாடியை தூய்மைப்படுத்தி, அதில் தன்னுடைய முகத்தைப் பார்க்க வேண்டும்; தன்னுடைய நிலையை அதில் பார்க்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தன்னுடைய நிலை அதில் தெரிய வரும். அவ்வாறு செய்யும்போது மற்றவர்கள் மீது செய்யக்கூடிய ஆட்சேபனைகள் முடிந்து விடும். மேலும் தனது

சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டுக் கொண்டே செல்லும். தானாகவே இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவைப் புரிந்து ஓதுவதற்கு கவனம் ஏற்படும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் ஜமாத்தில் உட்புற ஆராய்தலின் விளைவைத்தான் விரும்புகிறேன். எனவே இந்த ஆராய்தல் நம்மை பைஅத் உடன்படிக்கை, நமது பொறுப்புகளின் பக்கம் கவனம் செலுத்தும். மேற்கூறியதுபோன்று ஈமானில் முன்னேற்றத்திற்காக முயற்சி செய்பவரே உண்மையான நம்பிக்கையாளர் ஆவார்.

தற்பொழுது நம்பிக்கையாளருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஏற்படுத்திய அளவுகோலை நான் இப்பொழுது கூறுகின்றேன்.

**அன்னார் கூறுகின்றார்கள் :**

எப்பொழுது வரை ஒருவனிடம் உண்மையான நன்மையின் குவியல் இல்லையோ (ஒன்றிரண்டு நன்மைகள் கிடையாது –ஹுஸுர்.) அப்பொழுது வரை அவர் மூஃமின் கிடையாது. இறைவன் சூரா ஃபாத்திஹாவில் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற போதனையை வழங்கியுள்ளான். மனிதன் திருட்டு, விபச்சாரம் போன்ற பெரிய பெரிய பாவங்களைச் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்வது மட்டும் நன்மை என்று எண்ண வேண்டாம். பெரிய பெரிய பாவங்களைச் செய்யாமல் இருப்பது நன்மை எனக் கருத வேண்டாம். மாறாக, ஸிராத்தல்லதீன அன்அம்(த்)த அலைஹிம் என்று கூறியவாறு தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அருள் ஒரு தனி விஷயமாகும். எப்போது வரை அதனைப் பெறமாட்டாரோ அப்போது வரை நல்லவர் என அழைக்கப்படமாட்டார். பாருங்கள். இறைவன் பொய்யர்கள் மற்றும் ஒழுக்கமற்றவர்களுடன் என்னை சேர்க்காமல் இருப்பாயாக! என்ற துஆவை மற்றும் கற்றுக் கொடுக்கவில்லை. மேலும் அத்தோடு நிறுத்தவில்லை. அருள் புரிந்தவர்களுடன் சேர்ப்பாயாக! என்று துஆ கற்றுத் தந்துள்ளான். ஒன்றிரண்டு நன்மைகள் மட்டும் கிடையாது. மாறாக, உண்மையான நம்பிக்கையாளருடைய வேலை உண்மையான நன்மையின் குவியலை ஒன்று சேர்க்க வேண்டும். உண்மையான நன்மையின் குவியல் அல்லாஹ் மற்றும் படைப்பினங்களின் உரிமையை நிறைவேற்றுவதன் மூலம் கிடைக்கப் பெறும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

உறுதியாக நம்புங்கள். ஒவ்வொரு தூய்மை மற்றும் நன்மையின் ஆணி வேர் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதாகும். எந்த அளவு மனிதனுடைய ஈமானில் குறைபாடு இருக்குமோ அதே அளவு அவனுடைய நல்ல செயல்களில் குறைபாடு, கவனமின்மை ஏற்படும். ஆனால் ஈமான் உறுதியாக இருந்தால் அல்லாஹ்வை அவனுடைய அனைத்துப் பண்புகளுடன் உறுதியாக நம்பினால் அதே அளவுக்கு மனிதனின் செயல்களில் ஒரு வித்தியாசமான மாறுதல் ஏற்படும்.

இறைவன் மீது நம்பிக்கை வைக்கக்கூடியவன் பாவங்களைச் செய்யமாட்டான். இறைவன் மீது உண்மையான நம்பிக்கையிருந்தால் உண்மையில் அவர் தீமையில் ஈடுபடமாட்டார். ஏனென்றால் இந்த நம்பிக்கை அவனுடைய நஃப்ஸின் ஆற்றல் மற்றும் பாவத்தின் வழிகளை வெட்டி விடுகின்றது. பாருங்கள். ஒருவரின் கண்களை எடுத்து விட்டால் அவன் எவ்வாறு தீயவற்றைப் பார்ப்பார். கண்களே இல்லையென்றால் அவர் எவ்வாறு தீயவற்றைப் பார்ப்பார். பிறகு கண்கள் மூலமாக எவ்வாறு அவர் பாவம் செய்வார்? அதே போன்று அவருடைய கைகளை வெட்டினால், தீய உணர்வுகளைத் தூண்டும் ஆற்றலை வெட்டினால் பிறகு உறுப்புகள் தொடர்பான பாவங்களை அவர் எவ்வாறு செய்வார்? இதே போன்று ஒரு மனிதர் நஃப்ஸே முத்மயின்னா – நிம்மதியடைந்த ஆன்மாவின் நிலையில் இருக்கும் போது நஃப்ஸே முத்மயின்னா அவரை குருடனாக ஆக்கி விடுகிறது. அவருடைய பார்வையில் பாவம் செய்வதற்கான ஆற்றல் இருக்காது. அவர் பார்ப்பார். ஆனால் பார்ப்பது கிடையாது. ஏனென்றால் கண்களில் தீய பார்வை அழிந்து விடும். அவருக்கு

காது இருக்கும்; ஆனால் செவிடராக இருப்பார். அவரால் தீய வி-யங்களைக் கேட்க முடியாது. இதைப் போன்று அவருடைய எல்லா நஃப்ஸ் மற்றும் தீய காம உணர்வை ஊட்டக்கூடிய ஆற்றல்களும் உள்ளுறுப்புகளும் வெட்டப்படுகின்றது. மேலும் அவரிடம் பாவங்கள் நடைபெறக் காரணமாக உள்ள அனைத்து ஆற்றல்களிலும் ஒரு மரணம் ஏற்பட்டு விடும். அவர் ஒரு சடலத்தைப் போன்று ஆகி விடுகின்றார். அவன் இறை விருப்பத்தின் கீழ் இருப்பார். அதற்கு மாற்றமாக ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டார். இது இறைவன் மீது உண்மையான நம்பிக்கை வைப்பதன் நிலையாகும். இதன் விளைவாக அவருக்கு முழுமையான நிம்மதி கிடைக்கும் . இந்த தரத்தை அடைவது தான் மனிதனுடைய நோக்கமாக இருக்க வேண்டும்.

**மேலும் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத்திற்கு இதன் தேவை தான் உள்ளது. முழுமையான நிம்மதி கிடைப்பதற்கு முழுமையான நம்பிக்கை அவசியமாகும்.

**மேலும் கூறுகின்றார்கள்:**

எனவே நமது ஜமாஅத்துடைய முதல் கடமை என்னவென்றால் அவர்கள் இறைவன் மீது உண்மையான நம்பிக்கை வைக்க வேண்டும். இறைவனை ஏற்றுக் கொள்வது மட்டும் போதாது. இந்த நம்பிக்கையின் தரத்தைத் தான் அடைய வேண்டும்.

எனவே, இந்த தரத்தில் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நம்மை காண விரும்புகிறார்கள். அல்லாஹ் நம் அனைவரையும் நமது வாழ்வில் தூய மாற்றத்தை ஏற்படுத்தி, இந்த தரத்தைப் பெறக்கூடிய மக்களாக நம்மை ஆக்குவானாக! அல்லாஹ்வுடைய நெருக்கத்தில் முன்னேறக்கூடியவர்களாக ஆவோமாக! நம்மை எந்த ஹிதாயத்தில் நிலை நிறுத்தியிருக்கிறானோ, நம் மீது அவன் புரிந்த கருணை, அருளுக்கு நன்றி செலுத்தும் விதமாக அவனுடைய கட்டளைகளை கடைபிடிப்பதில் முன்னேறிக் கொண்டே செல்லக்கூடிய மக்களாக ஆவோமாக! நமது சந்ததிகளில் அஹ்மதிய்யத்தின் அருள் தொடர்வதற்கு தனது முயற்சி மற்றும் துஆவில் ஒருபோதும் கவனக்குறைவு ஏற்படக் கூடாது. இந்த நாடுகளில் இருக்கக்கூடிய உலக இன்பங்கள், நமது நோக்கத்தை அடைவதிலிருந்து தடுக்கக் கூடியதாக இல்லாதிருக்கட்டுமாக!

அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT GROSS GERAU, GERMANY**
**ON 17.06.2011**

Translated by : **Maulvi N. ZIYAVUL HAQ H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**